காலத்தில் சிந்திப்போன பால் என்று கணக்கு எழுதி வைத்திருந்தார்கள். அப்படி இப்பொழுதும் பால் சிந்திப் போகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பால் சிந்தத்தான் சிந்தும். சிந்தாமல் பால் கறக்கமுடியாது, விநியோகம் செய்யமுடியாது. அப்பொழுது இருந்த சீர்கேடான நிலைமையை அரசாங்கம் கவனித்து சீர்படுத்துகிறது. நல்ல பலனும் அடைந்துவருகிறது. பப்ளிக் செக்டாரே வேண்டாமென்று சொல்லமுடியாது, அவர்களும் நல்ல முறையில் நடத்தலாம் என்பதற்கு ஒரு நல்ல சான்று இது.

முதுமலை வனவிலங்கு சரணாலயம்.

***210 வினா—திரு. பி. வேலுசாமி :** மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

முதுமலை வனவிலங்கு சரணாலயப் பகுதியில் உல்லாசப் பிரயாணிகள் தங்குவதற்காகப் புதிதாக தங்கும் விடுதிகளும் விலங்குகளைப் பார்ப்பதற்காக வாகனங்களும் அமர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1967 ஆகஸ்டுத் திங்களில் ரூபாய் 50,000 செலவில் முதுமலை வனவிலங்குகள் உய்விடத்திற்கு வரும் பார்வையாளர்களுக்கு இரவில் தங்கும் விடுதி ஒன்றைக் கட்டுவதற்காக அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இவ்வேலை நடைபெற்று வருகிறது. இந்தக் கட்டடத்தில் மொத்தம் 8 பேர் தங்கும் வசதியுடன் 4 அறைகள் இருக்கும். இந்த உய்விடத்திற்கு வரும் பார்வையாளர்களுக்காக ஜீப் வண்டி ஒன்றும், மோட்டார் வண்டி ஒன்றும், லாரி ஒன்றும் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு வண்டிகள் வாங்குவதற்கான செயற்குறிப்புகள் எதுவுமில்லை.

கோவையில் கேந்திரக் கிராம விஸ்தரிப்பு நிலையங்கள்.

***211 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் எத்தனை கேந்திரக் கிராம விஸ்தரிப்பு நிலையங்கள் உள்ளன

(இ) அவை எந்தெந்த ஊர்களில் உள்ளன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) கோயம்புத்தூரில் மையக் கிராம வளர்ச்சி நிலையம் எதுவும் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாகிலும் அப்படி விஸ்தரிப்பு நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கால்நடைத் திட்டத்தை ஊக்குவிக்கின்ற முறையே ஐந்து ஆண்டுகளுக்குச் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு நிதி உதவி அதற்காகச் செய்தது. ஐந்து ஆண்டுகள் முடிந்துவிட்ட காரணத்தாலே அதை மேற்கொண்டு நடத்தமுடியாது. மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியும் கிடையாது.